தினமணி

## தேங்காயை விற்க இது உகந்த நேரம்

First Published : 25 Mar 2010 12:00:00 AM IST



விழுப்புரம், மார்ச் 24: தமிழகத்தில் அறுவடை செய்த தேங்காயை விற்பனை செய்ய உகந்த நேரம் இது என்று வேளாண் அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

கோவை, தஞ்சை, திண்டுக்கல், கன்னியாகுமரி, வேலூர், ஈரோடு, தேனி, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் மதுரை மாவட்டங்களில் தென்னை அதிக அளவில் பயிரிடப்படுகிறது. இந்த மாவட்டங்களின் பரப்பு மாநிலப் பரப்பின் 80 சதவீதமாகும்.

வேளாண் துறை கடந்த 10 ஆண்டுகளாக பொள்ளாச்சி சந்தைகளில் நிலவிய விலைகளை ஆய்வுசெய்தது. மேலும் பொள்ளாச்சி, அவல்பூந்துறை சந்தைகளில் வர்த்தகர்களிடம் ஆய்வு நடத்தியது.

மொத்த தேங்காய் உற்பத்தியில் 35 சதவீதம் தேங்காய் எண்ணெய் தயாரிக்க பயன்படுத்தப்பட்டாலும், தேங்காய் சார்ந்த பொருளாதார நடவடிக்கைகள் எண்ணெய் விலையைப் பொறுத்தே இருக்கின்றன. பாமாயில் இறக்குமதி தேங்காய் எண்ணெய் விலையைப் பாதிக்கிறது.நவம்பர் 2009 முதல் ஜனவரி 2010 வரை 14,39,705 டன் கச்சா பாமாயில் இறக்குமதி செய்யப்பட்டது. இது சென்ற ஆண்டைவிட இரண்டு சதவீதம் அதிகமாகும். எண்ணெய் பிழிவோர் சங்க ஆய்வின்படி நாட்டில் 2009-10-ல் 6.6 லட்சம் டன் கொப்பரையும், 4.3 லட்சம் டன் தேங்காய் எண்ணெயையும் உற்பத்தி செய்யும். இது சென்ற ஆண்டைவிட 1.5 சதவீதம் அதிகமாகும்.

அவல்பூந்துறை ஒழுங்குமுறை சந்தை தமிழகத்திலுள்ள மிகப்பெரிய கொப்பரை சந்தைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. எண்ணெய் ஆலையினர் இச் சந்தையிலிருந்து கொப்பரைகளை கொள்முதல் செய்கின்றனர். தற்போது வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து நேரடியாக கிலோ ரூ.31-க்கு கொள்முதல் செய்கின்றனர். கோவை, மதுரை, திருச்சி, சென்னை போன்ற நகரங்களின் இளநீர் தேவை தற்போது ஏறுமுகத்திலேயே உள்ளது. விவசாயிகள் இளநீருக்காக குறுகிய காலங்களில் பலனைத் தரும் ரகங்களையே நடவு செய்ய விரும்புகின்றனர்.

தேங்காய் விற்பனை நிலை குறித்து வேளாண் வணிக துணை இயக்குநர் என்.தனவேல் கூறியது:

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மைய ஆய்வின்படி மார்ச் முதல் ஜூன் 2010 வரை பண்ணை அளவில் தேங்காய் விலை காய் ஒன்றுக்கு ரூ.4.25 முதல் ரூ.4.80 வரை நிலவும். மேலும் ஜூன் வரை விலை அதிகரிக்க வாய்ப்பு இல்லை. எனவே விவசாயிகள் உடனே தங்களிடம் உள்ள தேங்காயை விற்பனை செய்ய பரிந்துரைக்கப்படுகின்றனர்

என்றார். தேங்காயின் விலை ஜூன் மாதம் வரை அதிகரிக்க வாய்ப்பு இல்லாததால் விவசாயிகள் உடனே விற்பனை செய்வதே பாதுகாப்பானது என்றார் வேளாண்மை இணை இயக்குநர் கு.ராமலிங்கம்.

**விவசாயத் தொழிலாளர் சங்கக் கூட்டம்**

First Published : 25 Mar 2010 03:21:32 AM IST

அறந்தாங்கி, மார்ச் 24: அறந்தாங்கி அருகேயுள்ள கண்டிச்சங்காட்டில் விவசாயத் தொழிலாளர் சங்க ஒன்றியப் பேரவைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விவசாயத் தொழிற்சங்க மாவட்டக் குழு உறுப்பினர் எஸ். இருதயராஜ் தலைமை வகித்தார். வட்டப் பொருளர் வி. லட்சுமணன்,மாவட்டக் குழு உறுப்பினர் கே. நூர்முஹம்மது மற்றும் நிர்வாகிகள் அ. ஜெகந்நாதன், கே. சரோஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டத் துணைத் தலைவர் வீ. வீரையா கொடியேற்றினார். மாவட்டச் செயலர் ஒய். சங்கர் சிறப்புரையாற்றினார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வட்டச் செயலர் எம். முத்துராமலிங்கன், மாதர் சங்க ஒன்றியத் தலைவர் எஸ். சரோஜா, விவசாய சங்க மாவட்டக் குழு கே. லட்சுமி, விவசாய சங்க வட்டச் செயலர் எஸ். பாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முன்னதாக, விவசாய சங்க நிர்வாகி ஒய். சின்னப்பா வரவேற்றார். நிறைவில், அ. ஷாகுல்அமீது நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க்கடன் வழங்கக் கோரிக்கை**

First Published : 25 Mar 2010 02:55:09 AM IST

திருவாரூர், மார்ச் 24: சிறு, குறு விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க் கடன் வழங்க வேண்டும். இதர விவசாயிகளுக்கு 4 சத வட்டியில் கடன் வழங்க வேண்டும் என்று கோரிóக்கை விடுக்கப்பட்டுள்ளது.

திருவாரூரில் புதன்கிழமை நடைபெற்ற தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் 22-வது மாவட்ட மாநாட்டில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளியிடப்பட்டு இரண்டாண்டுகள் கடந்த நிலையில், மத்திய அரசு அத் தீர்ப்பை உடனடியாக அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். காவிரியில் நீர்ப்பாசனம் போதுமான அளவுக்குக்

கிடைக்காத நிலையில், மாயனூரில் காவிரியின் குறுக்கே கட்டப்படும் கதவணை, கரூருக்கு மேற்கே நூற்றுக்கணக்கான மின் மோட்டார்கள் மூலம் முறைகேடாக தண்ணீர் எடுப்பதையும் தடுத்து டெல்டா மாவட்ட விவசாயிகளை அரசு பாதுகாக்க வேண்டும். காவிரியில் மணல் எடுப்பதைத் தடுக்க வேண்டும். வெள்ள நீரை சேமித்து நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த வேண்டும்.

தீவிர நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மூலம் நிலக்குவியல் முறையை ஒழித்து, உபரி நிலங்களையும், விவசாயத்துக்கு தகுதியான தரிசு நிலங்களையும், விவசாயிகளுக்கும், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டும்.

உள்நாட்டு விவசாய உற்பத்தியை பாதுகாக்க லட்சக்கணக்கான ஏக்கர் விளை நிலங்களை உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள், அரசியல்வாதிகள், அதிகாரிகள் சட்டவிரோதமாக அபகரித்து வருவதைத் தடுக்க வேண்டும்.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவுப் பொருள்களின் விதைகளை முற்றிலுமாக இந்தியாவில் தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மீன் வளர்ப்புக்கு சலுகைக் கட்டணத்தில் மின்சாரம் வழங்க வேண்டும். மீன் வளர்ப்புக்கு குறைந்த காப்புத்தொகை நிர்ணயிக்க வேண்டும். தென்னையைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த தென்னைப் பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்க வேண்டும்.

வட்டார அளவில் தேங்காய் கொள்முதல் செய்ய வேண்டும். தென்னக நதிகள் இணைப்பை மேற்கொள்ள வேண்டும்.

நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,500, தமிழகத்தில் 9.5 சதம் பிழிதிறன் உள்ள கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 2,500 விலை நிர்ணயம் செய்ய வேண்டும். காவிரி வடிநிலப் பகுதி மேம்பாட்டுக்கென சிறப்புப் பெருந்திட்டத்துக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து தமிழக அரசு உடனடியாக பணிகளைத் தொடங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டுக்கு எம். சிவஞானம், பி.தமிழ்ச்செல்வி ஆகியோர் தலைமை வகித்தனர். சங்கத்தின் மாநில பொதுச் செயலர் வே. துரைமாணிக்கம் மாநாட்டைத் தொடக்கி வைத்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாகை மாவட்டச் செயலர் எம். செல்வராசு, திருவாரூர் மாவட்டச் செயலர் வெ. வீரசேனன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் வை. சிவபுண்ணியம், கே. உலகநாதன், மாவட்ட ஊராட்சித் தலைவர் எம்.எஸ். கமலவதனம், விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் பி.எஸ். மாசிலாமணி, முன்னாள் மாவட்டச் செயலர் எஸ்.எஸ். திருஞானசம்பந்தம், ஒன்றியக்குழுத் தலைவர்கள் பி.ஆர். பாண்டியன் (கோட்டூர்), பாஸ்கரவள்ளி (மன்னார்குடி) உள்ளிட்டோர் பங்கேற்றுப் பேசினர்.

**வேளாண் அறிவியல் நிலையத்தில் பயிற்சி, செயல் விளக்கம்**

First Published : 25 Mar 2010 02:53:58 AM IST

நீடாமங்கலம், மார்ச் 24: நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் கரும்புத் தோகையை தூளாக்கும் கருவி குறித்த பயிற்சி, செயல்விளக்கம் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் நிலையத்தின் வேளாண் விரிவாக்க இணைப் பேராசிரியர் முனைவர் அ.பவுன்ராஜ் தலைமைவகித்து பேசியது:

கரும்புத் தோகையை தீ வைத்து கொளுத்தும் போது மண்ணில் உள்ள நன்மை பயக்கும் நுண்ணுயிர்கள் சாகடிக்கப்படுகின்றன. முளைப்புத் திறன் பாதிப்பு, சுற்றுப்புற சூழல் பாதிப்பு, மகசூழ் குறைவு போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. இந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்ய இந்தக் கருவியை பயன்படுத்தி தோகையை தூளாக்குவதால் மண்ணில் உள்ள அங்ககப் பொருள்கள் அதிகரிக்கிறது. கரும்புத்தோகை மண்ணை மூடுவதால் களை கட்டுப்படுத்தப்படுகிறது என்றார்.

பண்ணை மேலாளர் ரா.கார்த்திக் பேசியது:

தோகை தூளாக்கப்படும் பொழுது 3 டன் அளவு அங்ககப் பொருள்கள் கிடைக்கிறது. 2.8 சதம் நைட்ரஜன் 2.2 சதம் பாஸ்பரஸ், 4.4 சதம் பொட்டாஷ் உரங்கள் கிடைக்கின்றன என்றார். பயிற்சியில் முனைவர் ம. செந்தில்குமார், திருவாரூரான் சர்க்கரை ஆலை துணைப் பொது மேலாளர் கே.வேலுசாமி, மேலாளர் (கரும்பு) வெங்கடேச பெருமாள், துணை மேலாளர் (கரும்பு) ஆர்.பாலசுப்பிரமணியன், கரும்பு ஆய்வாளர் எஸ். மணிகண்டன் ஆகியோர் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்து, ஆலோசனைகளை வழங்கினர்.

**எண்ணெய் வித்து பெருக்கு திட்ட பயிற்சி முகாம்**

First Published : 25 Mar 2010 12:00:00 AM IST

மதுராந்தகம்,மார்ச் 24: அச்சிறுபாக்கம் வட்டார வேளாண்மை அலுவலகத்தில் எண்ணெய் வித்து பெருக்கு திட்ட பயிற்சி முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

முகாமில், வேளாண்மை உதவி இயக்குநர் சந்திரசேகர்(பொறுப்பு) எண்ணெய் வித்து பெருக்கு திட்டம், முக்கியத்துவம், மானியங்கள் ஆகியவை குறித்து எடுத்துரைத்தார்.

வேளாண்மை அலுவலர் கிருஷ்ணகுமாரி, எண்ணெய் வித்து பயர்களின் சாகுபடி முறைகள் பற்றியும், உதவி வேளாண்மை அலுவலர் ரமேஷ், பூச்சி மற்றும் நோய் நிர்வாகம் பற்றியும், விதைச் சான்று அலுவலர் பிரபாகரன், விதை உற்பத்தி, சேமிப்பு, சேமிப்பால் ஏற்படும் இடர்பாடுகள் மற்றும் நிவர்த்தி செய்யும் முறைகள் பற்றியும், மதுராந்தகம் வேளாண்மை அலுவலர் கிருஷ்ணவேணி, விதை விற்பனை செய்வது அதற்கு அரசு அளிக்கும் மானியங்கள் பற்றியும் எடுத்துரைத்தனர்.

இம் முகாமில் 50 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

முகாமிற்கு, அச்சிறுபாக்கம் பேரூராட்சி தலைவர் வசந்தமாலா ரவி தலைமை தாங்கினார். துணைத் தலைவர் தாவூத்பீ முன்னிலை வகித்தார். உதவி வேளாண்மை அலுவலர் தீர்த்தம் வரவேற்றார்.

**செஞ்சேரி கொள்முதல் நிலையத்தில் ரூ.28 கோடி கொப்பரை கொள்முதல்**

First Published : 25 Mar 2010 06:49:52 AM IST

திருப்பூர், மார்ச் 24: செஞ்சேரி கொள்முதல் நிலையத்தில் கடந்த ஒரே ஆண்டில் ரூ.28 கோடிக்கு கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக, அதிகாரி தெரிவித்தார்.

÷திருப்பூர் மாவட்டம்- பல்லடம், கோவை மாவட்டம்- நெகமம், பொள்ளாச்சி பகுதிகளில் உள்ள அரசு கொப்பரை கொள்முதல் நிலையங்களில் இரு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்யும் கொப்பரைகளை விற்பனை செய்து வருகின்றனர். விவசாயிகளின் கோரிக்கையை அடுத்து கடந்த ஆண்டு பொங்கலூர் அருகேயுள்ள செஞ்சேரி பகுதியில் கொப்பரை கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டது.

÷இக் கொப்பரை கொள்முதல் நிலையத்தில் கிலோவுக்கு ரூ.44.50 வழங்கப்பட்டு வந்தது. வாரத்தில் 5 நாட்கள் கொப்பரை வாங்கப்பட்டு வந்தது. இந்நிலையில், ஒரு வருடம் நிறைவடைவதை அடுத்து கொப்பரை கொள்முதல் நிலையங்களின் செயல்பாடுகளை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

÷தேசிய கூட்டுறவு விற்பனை நிலையம் (நேபட்), தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை நிலையம் (டான்பட்) அதிகாரிகள் நடத்திய ஆய்வில் இதுவரை கொள்முதல் செய்யப்பட்ட கொப்பரை, அதன் தரம், பணப் பட்டுவாடா, இருப்பு, விலை நிர்ணயம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

÷அதன்படி, செஞ்சேரி கொள்முதல் நிலையத்தில் மட்டும் கடந்த ஏப்ரல் மாதம் முதல் பிப்ரவரி வரையிலான 11 மாதத்தில் ரூ.28 கோடிக்கு கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

÷இந்த ஆய்வைத் தொடர்ந்து கடந்த சில நாட்களாக கொப்பரை கொள்முதல் செய்வது நிறுத்தப்பட்டிருந்தது. ஆய்வு முடிவடைந்ததை அடுத்து வியாழக்கிழமை முதல் வழக்கம்போல் கொப்பரை கொள்முதல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம்**

First Published : 25 Mar 2010 07:08:59 AM IST

ஈரோடு, மார்ச் 24: பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை 76.83 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 430 கன அடி வீதம் தண்ணீர் வந்தது.  பாசனத்துக்கு வாய்க்காலில் விநாடிக்கு 2300 கன அடியும், ஆற்றில் விநாடிக்கு 600 கன அடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையி0ன் நீர் இருப்பு
14 டிஎம்சி.

**வெங்காய குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும்:ஆட்சியர்**

First Published : 25 Mar 2010 03:16:42 AM IST

பெரம்பலூர், மார்ச் 24: பெரம்பலூர் மாவட்டத்தில், விவசாயிகளின் கோரிக்கைகேற்ப விரைவில் வெங்காய குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும் என்றார் மாவட்ட ஆட்சியர் எம். விஜயகுமார்.

பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக் கூட்ட அரங்கில், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டம் சார்பில், மாவட்ட அளவிலான வெங்காய சாகுபடி விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த முகாமில், வெங்காயம் சாகுபடி குறித்த கையேட்டை வெளியிட்டு, அவர் மேலும் பேசியது:

பெரம்பலூர் மாவட்டத்தில் பயிராகும் தோட்டக்கலை பயிர்களில் வெங்காயம் முக்கியப் பயிராகும். இம் மாவட்டத்தில் 7 ஆயிரம் ஹெக்டேருக்கும் அதிகமாக வெங்காயம் பயிரிடப்பட்டு வருகிறது.

சாகுபடியில் அதிக விளைச்சல் பெறவும், பூச்சிகளிடமிருந்து பயிரை பாதுகாத்துக் கொள்வது தொடர்பாக, வேளாண் வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் வெங்காய குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து, அதற்கான நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விரைவில் அந்தப் பணி முடிவடைந்தவுடன் குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும்.

தமிழக அரசு விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தால் தான் நாடு முன்னேற்றமடையும்.

2007-2008 ஆம் ஆண்டு முதல் 2009-2010 ஆம் ஆண்டு வரை ஆத்மா திட்டத்துக்காக ரூ.76.57 லட்சம் நிதி பெறப்பட்டு, செலவிடப்பட்டுள்ளது.

செம்மை நெல் சாகுபடி, கால்நடை வளர்ப்பு, பட்டு வளர்ப்பு, முந்திரி சாகுபடி, காய்கறிகள் சாகுபடி, மக்காசோள சாகுபடி, வனப்பயிர் சாகுபடி ஆகியவற்றில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் பயிற்சி வழங்கப்பட்டன.

புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறிய, பிப்ரவரி 2009-ல் புதுதில்லியில் நடைபெற்ற இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம் சார்பில், விவசாய விஞ்ஞான விழா, 2009 நவம்பர் மாதம் நடைபெற்ற சர்வதேச வேளாண் பொறியியல் பொருள்காட்சி ஆகியவற்றை பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் கண்டு வந்ததன் மூலம், விவசாயிகள் பல்வேறு தொழில்நுட்பங்களை தெரிந்து கொண்டனர்.

மேலும், செம்மைநெல் சாகுபடி, வெங்காய சாகுபடி, காய்கறி சாகுபடி, கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட தலைப்புகளில் தலா ரூ.40 ஆயிரம் செலவில் 10 பண்ணைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

ஆத்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் விளைவாக, தற்போது விவசாயிகள் செம்மை நெல் சாகுபடி செய்து வருகின்றனர் என்றார் விஜயகுமார்.

இந்தப் பயிற்சியில், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்ட இயக்குநர் வெ. ராதாகிருஷ்ணன், தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனங்களின் செயலர் பி. நீலராஜ், வேளாண்மை துணை இயக்குநர்கள் செ. சிவக்குமார், வே. விஜயகுமார், வருவாய்க் கோட்டாட்சியர் ச. பாலுசாமி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் கி. கண்ணதாசன் உள்ளிட்ட தோட்டக்கலை வல்லுநர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்**

First Published : 25 Mar 2010 06:57:48 AM IST

சேலம், மார்ச் 24: மேட்டூர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 72.45 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,192 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 1,900 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 34.84 டி.எம்.சி.

**ஆரணி மார்க்கெட் கமிட்டியில் நெல் மூட்டைகள் தேக்கம்**

First Published : 25 Mar 2010 02:04:49 AM IST

ஆரணி, மார்ச் 24: ஆரணி மார்க்கெட் கமிட்டியில் நெல் மூட்டைகள் அதிக எண்ணிக்கையில் வந்ததால் தேக்கமடைந்து எடை போட முடியாத சூழல் ஏற்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்த விவசாயிகள் புதன்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர்.

ஆரணி மார்க்கெட் கமிட்டியில் செவ்வாய்க்கிழமை அதிக அளவில் நெல் மூட்டைகள் வந்தன. ஆனால் நெல் கொள்முதல் செய்வோர் அதிக அளவில் வராததால் நெல் மூட்டைகள் தேக்கமடையத் தொடங்கின (படம்).

இதனால் புதன்கிழமை விவசாயிகள் கொண்டு வந்த நெல் மூட்டைகளை எடை போடாமல் இருந்தனர்.

ஆத்திரமடைந்த விவசாயிகள் சிலர் ஆரணி-வந்தவாசி சாலையில் சாலை மறியலில் செய்தனர். நகர காவல் நிலையப் போலீஸô்ர் சம்பவ இடத்திற்கு சென்று சமரசம் செய்தனர்.

**சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை நிறைவு**

First Published : 25 Mar 2010 12:00:00 AM IST

திருக்கோவிலூர், மார்ச் 24: திருக்கோவிலூரை அடுத்த மூங்கில்துறைப்பட்டு கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 2009-10-ம் ஆண்டின் கரும்பு அரவை அண்மையில் நிறைவடைந்தது.

÷இந்த ஆலையில் இந்தாண்டு 4 லட்சத்து 35 ஆயிரத்து 713 டன்கள் கரும்பு அரவை செய்து 8.80 சதவீதம் சர்க்கரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

÷மேலும் 63 ஆயிரத்து 723 டன்கள் கரும்பு இதர கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பியதாகவும் இந்த ஆலையின் தனி அலுவலரும், மாவட்ட வருவாய் அலுவலருமான ச.வளர்மதி தெரிவித்தார்.

÷மேலும் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பின் விவரம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளிலேயே அதிகபட்ச அரவை செய்து முதலிடத்தில் உள்ளதோடு, இந்த ஆலை முழு அரவைத் திறனுக்கு கரும்பு அரவை செய்துள்ளது.

÷கரும்பு உற்பத்தியை அதிகரித்து ஆலைக்கு அனுப்பிய அங்கத்தினர்கள் அரவையில்லா காலங்களில் இயந்திர பராமரிப்புப் பணிகளை திட்டமிட்டு விரைந்து முடித்து, ஆலையின் அரவையை வழக்கத்தை விட ஒரு மாதம் முன்னதாக ஆகஸ்ட் மாதத்தில் தொடங்க திட்டமிடப்பட்டு, இயந்திர பழுது நீக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகள் துரிதமாக செய்யப்பட்டு வருகின்றனர்.

÷இந்த பருவ அரவையில்லா காலத்தில் சுமை ஏற்றி வரும் வாகனங்களின் வசதிக்காக ஆலையின் எடை தளத்திலிருந்து கரும்பு இறக்கும் இடம் வரையிலான பகுதியில் சிமென்ட் கான்கீரிட் தளம் அமைக்கும் பணி செய்து முடிக்கப்படும்.

÷அடுத்த ஆண்டும் ஆலையின் முழு அரவைத் திறனுக்கு கரும்பு அரவை செய்ய, ஆலை அங்கத்தினர்கள் கரும்பு பயிரிட்டு ஆலைக்கு பதிவு செய்துள்ளார்கள்.

÷அதேபோல் மார்ச் 7-ம் தேதி வரை கரும்பு அனுப்பிய அங்கத்தினர்களுக்கு கரும்பு கிரயம் ரூ.6821.42 லட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

÷கடைசி வாரத்துக்கான கரும்பு கிரயம் ஒரு வாரத்துக்குள் பட்டுவாடா செய்யப்படும். மேலும் நடப்பு அரவை பருவத்துக்கு ஆலைக்கு கரும்பு அனுப்பியுள்ள அங்கத்தினர்களுக்கு அரசு அறிவித்துள்ள கூடுதல் விலையான டன்னுக்கு ரூ.100 அரசு ஆணை பெறப்பட்ட உடன், அரவைப் பருவத்துக்கு கரும்பு கொள்முதல் விலையை உயர்த்தி

அரசு அறிவித்துள்ளதால், கரும்பு பயிரிட்டு பதிவு செய்யாமல் வைத்துள்ள அங்கத்தினர்களும் தங்களது கரும்பை பதிவு செய்ய வேண்டும் என செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தினமலர்

**துல்லிய பண்ணை மருத்துவ பயிர்கள்வேளாண் பல்கலை., துணைவேந்தர் ஆய்வு**

சிறுபாக்கம்: சிறுபாக்கம் அருகே துல்லிய பண்ணை மருத்துவ பயிர்களை வேளாண் பல் கலைக்கழக துணைவேந்தர் ஆய்வு செய்தார்.சிறுபாக்கம் அடுத்த அடரிகளத்தூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி ராசு தனது வயலில் செல்போன் மூலம் இயங்கக்கூடிய உயர் ரக தொழில் நுட்ப சொட்டு நீர் பாசனம் அமைத்து மூங்கில் பயிரிட்டுள்ளார். இதனை தமிழ்நாடு வேளாண் பல்கலை கழக துணைவேந்தர் முருகேசபூபதி நேற்று பார்வையிட்டார்.அதுபோல் விவசாயி கருணாமூர்த்தி வயலில் பயிரிடப்பட்டுள்ள கோலியஸ் மருத்துவ பயிரினையும் பார்வையிட்டு விவசாயிக்கு ஆலோசனைகள் வழங்கினார்.

விவசாயிகளின் முயற்சிகளை பாராட்டிய துணைவேந்தர், தொடர்ந்து விவசாயிகளிடம் நீர் சிக்கனத்தின் முக்கியத்துவம் குறித்தும், இஸ்ரேல் போன்ற நாடுகளில் கடைபிடிக்கப்படும் நீர் சிக்கன முறைகள் மற்றும் நீர் வழி உர நிர்வாகம் குறித்து விளக்கினார்.ஆய்வின் போது வேளாண் பல்கலை கழக விரிவாக்க கல்வி இயக்குனர் கலைசெல்வன், அறிவியல் நிலைய பேராசிரியர் சாத்தையா, உதவி பேராசிரியர் ராஜி, தோட்டக்கலை துணை இயக்குனர் முகமதுயாஜி, உதவி இயக்குனர்கள் முருகன், ரமணன், அலுவலர்கள் கோவிந்தராசு, தர்மலிங்கம் உடனிருந்தனர்.

**வாய்க்காலில் தரைப்பாலம் அமைக்கஅதிகாரிகளுக்கு விவசாயிகள் கோரிக்கை**

பரங்கிப்பேட்டை: வாய்க்காலில் தரைப் பாலம் அமைக்க விவசாயிகள் கோரிக்கை விடுத் துள்ளனர்.
பரங்கிப்பேட்டை ஒன்றியம் பூவாலை ஊராட்சியின் மேற்கு பகுதியில் 500 ஏக்கர் விளை நிலங்கள் உள்ளது. இந்த விளை நிலங்களுக்கு பாசன வாய்க்கால்களை கடந்து செல்ல வேண்டும். பல ஆண்டாக வாய்க்கால் சிமென்ட் குழாய் மூலம் வழி ஏற்படுத்தி டிராக் டர் கள் செல்லவும், மாட்டு வண்டியில் உரங்களை ஏற்றி செல்லவும், விளைந்த நெல், உளுந்து மூட்டைகளை வெளியில் எடுத்தும் வந்தனர்.

நான்கு ஆண்டிற்கு முன் வாய்க்காலை தூர் வாரும்போது சிமென்ட் குழாய், மணல் மூட்டைகளை அப்புறப்படுத்தி விட்டார்கள். இதனால் டிராக்டர், மாட்டு வண்டிகள் மற்றும் பொதுமக்கள் வாய்க்காலை கடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.இதனால் பாதிக்கப் பட்ட விவசாயிகள், வாய்க் காலில் தரைப்பாலம் அமைத்துதரக்கோரி கலெக்டர் குறைகேட்பு கூட்டத்திலும், பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் மனு கொடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் விவசாயிகள் பயன் பெரும் வகையில் பாலம் கட்டிதர பொதுப்பணிதுறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத் துள்ளனர்.

**பென்னாகரத்தில் மஞ்சள் சாகுபடி அமோகம் கூடுதல் விலையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

பென்னாகரம்: பென்னாகரம் தொகுதியில் மஞ்சள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கூடுதல் விலை கிடைப்பாதல் அறுவடை பணியில் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.
பென்னாகரம் வறட்சி மிகுந்த தொகுதியாக இருந்தாலும், பாப்பாரப்பட்டி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமப் பகுதிகள் ஓரளவிற்கு நலத்தடி நீர் ஆதாரம் உள்ள பகுதியாகவே உள்ளன. இங்கு கிணற்று பாசனத்தின் மூலம் மஞ்சள் பயிர் செய்துள்ள விவசாயிகள் தற்போது அறுவடை செய்து வருகின்றனர். சிட்லகாரன்பட்டியைச் சேர்ந்த விவசாயி பச்சை என்பவர் தனது நிலத்தில் ஒன்னரை ஏக்கர் பரப்பளவில் மஞ்சள் சாகுபடி செய்துள்ளார். கடந்த ஏப்ரல் மாதம் விதைக்கப்பட்ட மஞ்சள் 10 மாதங்களுக்கு பின் தற்போது அறுவடை செய்கின்றனர். ஏக்கருக்கு 6 குவிண்டால் வரை மஞ்சள் கிடைக்கிறது. ஈரோடு மஞ்சள் சந்தையில் ஒரு குவிண்டால் 15 ஆயிரம் ரூபாய் வரை விலை போகின்றன. மேலும் இந்த பயிருக்கு மிதமான தண்ணீர் இருந்தால் போதும். அதிகளவு உரம், பூச்சிமருந்துகள் தேவையில்லை. இப்பகுதியில் கால்நடைகள், காட்டு பன்றிகள் மூலம் மஞ்சள் பயிருக்கு எவ்வித பாதிப்பும் இல்லாததால் விவசாயிகள் ஆர்வமுடன் பயிர் செய்கின்றனர். மேலும் குறைந்த முதலீட்டில் அதிக லாபம் கிடைப்பதால் விவசாயிகள் பலர் ஆர்வமுடன் மஞ்சள் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

**வேளாண் துறைக்கு ரூ. 1,253 கோடி கடன் வழங்க இலக்கு: கலெக்டர்**

ஈரோடு: "வரும் நிதியாண்டுக்கு வேளாண் துறைக்கு அதிகபட்சமாக 1,253 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது," என கலெக்டர் சுடலைக்கண்ணன் பேசினார். ஈரோடு மாவட்ட வங்கியாளருக்கான காலாண்டு மற்றும் வரும் நிதியாண்டுக்கான கடன் திட்டம் குறித்த கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. மாவட்ட கலெக்டர் சுடலைக்கண்ணன் தலைமை வகித்து பேசியதாவது: வரும் நிதியாண்டில் வேளாண்மைக்கு 1,253.49 கோடி, சிறு தொழில்களுக்கு 1,057.76 கோடி, இதர முன்னுரிமை கடனராக 661.75 கோடி வழங்கப்பட உள்ளது.

மொத்தம் 2,973 கோடி ரூபாய் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இது நடப்பு நிதியாண்டை விட 396.25 கோடி ரூபாய் (15.28 சதவீதம்) அதிகம். வேளாண்மைக்கு முக்கியத்துவம் தந்து அதிக கடன் ஒதுக்கப்பட்டுள்ளது. நவீன விவசாயம் மற்றும் தொழில்நுட்பத்துடன் கூடிய தோட்டக்கலை திட்டங்கள், விவசாய விளை பொருள் பாதுகாப்பு மற்றும் யுக்திகள், சொட்டு நீர்ப்பாசன திட்டம், காளான் வளர்ப்பு மற்றும் மண் புழு உரம் தயாரிப்பு ஆகிய திட்டங்களுக்கு முக்கியத்துவம் தரப்படும். வசதியுள்ள பெரும் தொழிலதிபர்களுக்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளது. அவர்களுக்கு பணம் கொடுக்கவும், உதவி செய்யவும் நிறைய பேர் உள்ளனர். ஆனால், வசதியில்லாத சிறு தொழில் புரிபவர்களுக்கு வாய்ப்புகள் என்பது குறைவு. அவர்களுக்கு கை கொடுத்து தூக்கி விட யாரும் இருக்க மாட்டர். வங்கியாளர்கள் அவர்களை கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். சிறு தொழில் புரிபவர்களுக்கு உதவி செய்வதால், அவர்கள் தலைமுறையே நல்ல நிலைக்கு வரும். அவ்வாறு செய்வதால் உங்களுக்குதான் அந்த பெருமை சேரும். நடப்பு நிதியாண்டுக்கான கல்விக் கடன் தருவதில் சில வங்கிகள் தாமதப்படுத்துகின்றன.

விரைவில் கல்வி கடன் இலக்கை பூர்த்தி செய்ய வேண்டும். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குவதில் அனைத்து வங்கிகளும் சிறப்பாக செயல்படுகின்றன. இன்னும் சிறப்பாக பணிபுரிய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். முன்னோடி வங்கி மண்டல மேலாளர் சண்முகம் வரவேற்றார். மேலாளர் முனிராஜ் முன்னிலை வகித்தார்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குவதில் மாவட்ட அளவில் சிறப்பாக செயல்பட்ட பாரத ஸ்டேட் வங்கி, கனரா வங்கிக்கு கேடயம், சான்று வழங்கப்பட்டது. கிளை வங்கிகளில் சிறப்பாக செயல்பட்ட பாரத ஸ்டேட் வங்கி உலகடம் கிளைக்கு 15 ஆயிரம் ரூபாய், கடம்பூர் கிளைக்கு 10 ஆயிரம் மற்றும் கனரா வங்கி சக்திநகர் கிளைக்கு 5,000 ரூபாய் ரொக்கப்பரிசு வழங்கப்பட்டது.

**11ம் ஆண்டில் கரூர் உழவர் சந்தை 4.6 கோடி டன் காய்கறி விற்பனை**

கரூர்: கரூர் உழவர்சந்தை 11வது ஆண்டு துவக்கவிழா சந்தை வளாகத்தில் நடந்தது. வேளாண்மை துணை இயக்குனர் முத்துசாமி தலைமை வகித்தார். இணை இயக்குனர் ஜெகதீசன், தோட்டக்கலைத்துறை அலுவலர் நடராஜன், வேளாண்மைத்துறை அலுவலர் ÷ஷாபா பேசினர். 2000 பிப்ரவரி இரண்டாம் தேதி துவங்கப்பட்டு கடந்த 13ம் தேதி வரை பத்தாண்டுகளில் காய்கறி வரவு 4.60 கோடி டன் வரத்து இருந்தது.

இதன் மதிப்பு 50.52 கோடி ரூபாய். நான்கு லட்சத்து ஆறாயிரம் விவசாயிகள் வருகை புரிந்துள்ளனர். ஒரு கோடியே 30 லட்சம் நுகர்வோர் வந்து சென்றுள்ளனர். 2000-01ல் சராசரியாக தினசரி காய்கறி வரத்து 1.17 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 15.46 டன் காய்கறி வந்துள்ளது. 141 விவசாயிகள் விற்பனை செய்தனர். மூவாயிரத்து 517 நுகர்வோர் பயனடைந்தனர். இதுவே 2009-10ல் 2.73 லட்சம் ரூபாய் மதிப்பில் 23.5 டன் காய்கறி விற்பனை செய்யப்பட்டுள்ளது. 184 விவசாயிகள் விற்பனையில் ஈடுபட்டுள்ளனர். நாலாயிரத்து 725 நுகர்வோர் பொருள் வாங்கியுள்ளனர். புதிதாக துவங்கப்பட்டுள்ள உழவன் உணவகத்தில் மதிப்பூட்டப்பட்ட பொருட்களான, தயிர், சுண்டல், பணியாரம், உளுந்தங்கஞ்சி, கம்மங்கூழ் போன்ற உணவு பொருள் விற்பனை செய்யப்படுகிறது. வேளாண் அலுவலர் கணேசன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் மகாவிஷ்ணு, கொளஞ்சி ஆகியோர் செய்திருந்தனர்.

**முருங்கை விலை சரிவு விவசாயிகள் கவலை**

க.பரமத்தி: க.பரமத்தி வாரச்சந்தையில் முருங்கை விலை சரிந்ததால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். க.பரமத்தி மற்றும் அரவக்குறிச்சி யூனியன் பகுதியில் பரவலாக முருங்கை சாகுபடி செய்யப்படுகிறது.சீசன் இல்லாத காலத்தில் கடந்த ஒரு மாதத்துக் கு முன் 20 காய் கொண்ட கட்டு ஒன்றுக்கு 40 முதல் 50 ரூபாய் வ ரை விலை கிடைத்தது. தற்போ து முருங்கை உற்பத்தி அதிகரித்ததால், வாரச்சந்தையில் கட்டுக்கு 2 ரூபாய் என்ற அளவு கடுமையான விலை சரிவு ஏற்பட்டது.

விவசாயிகள் கூறியதாவது: க.பரமத்தி, அரவக்குறிச்சி பகுதி விவசாயிகளின் முக்கிய பயிரில் ஒன்று முருங்கை. சீசன் காலத்தில் விலை கிடைக்காத பிரச்னை, கடந்த பல ஆண்டுகளாக நீடிக்கிறது. தற்போதுள்ள எம்.எல்.ஏ., கலிலூர் ரகுமான் முதல் பதவியில் இருந்த ஒவ்வொரு எம்.எல்.ஏ.,வும் பிரச்னைக்கு தீர்வாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடுமையான விலை சரிவு காரணமாக, பராமரிப்பு மற்றும் அன்றாட செலவை நினைக்கும்போது வேதனைதான் மிஞ்சுகிறது. சந்தைக்கு வாகனத்தில் கொண்டு வருவதற்கு பெட்ரோலுக்கான லாபம் கூட கிடைக்காத நிலையுள்ளது. விவசாயிகள் நலன் கருதி முருங்கைக்காய் கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு கூறினர்.

**வெங்காய சாகுபடி பயிற்சி**

பெரம்பலூர் :பெரம்பலூர் மாவட்ட வேளாண் துறை மூலம் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை திட்டம்( ஆத்மா) சார்பில் மாவட்ட அளவிலான வெங்காய சாகுபடி குறித்த பயிற்சி பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் கல்லூரி கூட்டரங்கில் நேற்று நடந்தது.பயிற்சியை மாவட்ட கலெக்டர் விஜயகுமார் தலைமை வகித்து குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனங்களின் செயலாளர் நீல்ராஜ் முன்னிலை வகித்தார். வேளாண் துணை இயக்குநர் விஜயகுமார் திட்டம் குறித்து விளக்கி கூறினார்.சிறிய வெங்காய சாகுபடியில் உழவியல் தொழில்நுட்பங்கள், வெங்காய விதை உற்பத்தி,துல்லிய பண்ணையத்தில் வெங்காய சாகுபடி, ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் நிர்வாகம் ஆகியவை குறித்து வேளாண் தொழில்நுட்ப வல்லுநர் கதிரவன், தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவன தேவி, தோட்டக்கலை துணை இயக்குநர் ராபர்ட் வின்சென்ட், திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி பயிர்பாதுகாப்புத்துறை தலைவர் கஜேந்திரன், பேராசிரியர் தினகரன் ஆகியோர் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். முன்னதாக வெங்காய சாகுபடி குறித்த சிறு கையேட்டினை கலெக்டர் விஜயகுமார் வெளியிட்டார். பயிற்சியில் தனலட்சுமிசீனிவாசன் கல்விநிறுவன ஆலோசகர் ராமமீனாட்சி, கல்லூரி முதல்வர் அனுசா, துணை முதல்வர் முத்துமணி உட்பட பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை வேளாண் துணை இயக்குநர் செந்தமிழ்செல்வன், வேளாண் அலுவலர் பச்சியம்மாள், வேளாண் அலுவலர் பாபு மற்றும் அலுவலர்கள் செய்திருந்தனர். முன்னதாக வேளாண் தொழில்நுட்ப மேலாண் முகமை திட்ட இயக்குநர் ராதாகிருஷ்ணன் வரவேற்றார். முடிவில் துணை இயக்குநர் சிவக்குமார் நன்றிகூறினார்.

**அழிந்து வரும் தோட்டக்கலை பண்ணை ரூ. பல லட்சம் பொருட்கள் மாயம்**

கமுதி: கமுதியில் உள்ள தோட்டக்கலை பண்ணை கட்டடம் பராமரிப்பின்றி அழிந்து வருவதோடு, இங்கிருந்த பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களும் மாயமாகி உள்ளன.

ராமநாதபுரம் மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறை மூலம் மர கன்றுகள் வளர்த்து விற்பனை செய்ய ,கமுதியில் மாதிரி தோட்டக் கலை பண்ணை துவங்கப் பட்டது. இங்கு போதிய இடம் , தண்ணீர் வசதிகள் இருந்தும், பூ ,பழம் உள் ளிட்ட மர கன்றுகளை வளர்க்க, எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. இதனால் இங்கு பல லட்சம் ரூபாய் மதிப் பீட்டில்,அரசால் வழங்கப் பட்ட பூந் தொட்டிகள், கூடாரங்கள் உட்பட உபகரணங்கள் சேதமடைந்து, வீணாகி அழிந்து வருகின்றன. இதனால் இங்குள்ளோர் மர கன்றுகள், பூந்தொட்டிகளை வாங்க உச்சிப்புளி அருகே சுந்தரமுடையான் பண் ணையை நாடி செல்லும் அவலம் ஏற் பட்டுள்ளது. கமுதியில் துவங்கப்பட்டபோதுதான் சுந்தரமுடையானிலும் பணணை ஏற்படுத்தப் பட்டது.

ஆனால் சுந்தரமுடையான் தோட்டக்கலை பண்ணை லாபகரமாக செயல்படும் நிலையில் , கமுதி தோட்டக்கலை பண்ணை அழிந்தும், அலுவலக உபகரணங்கள் மாயமாகியும் உள்ளன. கன்றுகள் வளர்க்க வழங்கிய தொட்டிகளும் மணற்குவியல் போல் பயனற்ற நிலையில் அடுக்கி வைக்கப் பட்டுள்ளன. தற்போது தோட்டக்கலைத்துறை பண்ணை இருந்த இடம் தெரியாமல், கட்டடங்கள் சேதமடைந்தும் உள்ளன. கொடைக்கானல் போல் கன்றுகள் வளர்க்க குளிரூட்டப்பட்ட அமைப்புகள் இருந்தும், தற்போது அக்கூடாரம் கால்நடைகள் அடைக்கும் இடமாக உருமாறி வருகிறது. இதன் மீது மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுத்து, தோட்டக்கலை பண் ணைக்கு புத்துயிர் அளிக்க முன்வரவேண்டும்.

**பாசன கால்வாயாக கஞ்சம்பட்டி ஆறு ரூ.18 கோடி ஒதுக்கீடால் மகிழ்ச்சி**

சாயல்குடி: கஞ்சம்பட்டி காட்டு ஆற்றை பாசன கால்வாயாக ஒழுங்கு படுத்த தமிழக அரசு 18 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளதால் 50 கிராம விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.கடலாடி தாலுகாவில் தென் மேற்கு எல்லையோர கிராமங்களாக உச்சிநத்தம், டி.எம்.கோட்டை, தரைக்குடி உள்ளிட்ட 20 கிராமங்கள் உள்ளன. இந்த பகுதி விவசாய விளை நிலங்களை கடந்து செல்லும் கஞ்சம்பட்டி காட்டாற்றில் ,ஒவ்வொரு ஆண்டும் பருவ மழை காலங்களில் பெருக்கெடுக்கும் பல ஆயிரம் கன அடி நீர் வீணாக கடலில் கலக்கிறது. தமிழகத்தின் பிற மாவட்டங்களில் "தண்ணீர் இல்லாத காடு" என பெயர் பெற்ற ராமநாதபுரம் மாவட்டத்தில் "கஞ்சம்பட்டி காட்டாற்று தண்ணீரை ஒழுங்குபடுத்தி, பாசனம் மற்றும் குடிநீருக்கு பயன்படுத்தும் வகையிலான திட்டத்தை அரசு செயல்படுத்த வேண்டும்," என, கடந்த அரை நூற்றாண்டாக இப்பகுதி மக்கள் அரசிடம் வலியுறுத்தி வந்தனர்.

இது தொடர்பாக கடந்த ஆண்டு அமைச்சர் தங்கவேலன் தலைமையில் சாயல்குடியில் நீர்பாசன கருத்தரங்கு நடந்தது. இதில் சாயல் குடி, உச்சிநத்தம் உள் ளிட்ட 40 க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர். அப்போது, கஞ்சம்பட்டி காட்டு ஆற்றை ஒழுங்குபடுத்தி பாசனக்கால்வாயாக்க வேண்டும் என விவசாயிகள் அமைச்சரிடம் வலியுறுத்தினர். இதனிடையே தற்போதைய தமிழக சட்டசபை நிதிநிலை அறிக்கையில் கஞ்சம்பட்டி காட்டாற்றை பாசன கால்வாயாக ஒழுங்கு படுத்த ரூ.18 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டது. இத்திட்ட பணி நிறைவடையும்பட்சத் தில், கடலாடி தாலுகாவை சேர்ந்த 43 கண்மாய்கள் பாசன வசதி பெறும். இதன்மூலம் இப்பகுதி மக்களின் அரை நூற் றாண்டு கால கனவு திட் டம் நனவாக இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**காய்கறி விலை உயர்வு**

சிவகங்கை: சிவகங்கை வார சந்தையில் பீன்ஸ், பட்டாணி, சோயா காய்கறிகள் வரத்து குறைந்துள்ளதால், விலை உயர்ந்துள்ளது. பயறு, பருப்பு வகைகளில் விலை குறைந்துள்ளது.சந்தையில் நேற்றைய விலை நிலவரம் (கிலோ):முன்பு 16 ரூபாய்க்கு விற்ற வெண்டைக்காய் 20 ரூபாய்க்கு விற்றது. கத்தரி-12, பாகற்காய்-20, முருங் கை பீன்ஸ்-40, கேரட்-20, முள்ளங்கி-10, உருளை கிழங்கு 12, முட்டை கோஸ்- 10, தக்காளி-10, கருணை கிழங்கு-24, இஞ்சி- 60, அவரை- 24, பட்டர் பீன்ஸ்-60, சின்ன வெங்காயம்-12, பெல்லாரி-14, காலிபிளவர்-15, சேணை கிழங்கு-28, சேம்பு-40, பச்சை மிளகாய்-16, பீட்ரூட்-10, சவ்சவ்- 10, சோயா பீன்ஸ்- 40, எலுமிச்சை- 35, பீர்க்கை-20, முருங்கை -25.பழங்கள்: ஆப்பிள்- 120, இரண்டாவது ரகம்-100, மாதுளை-80, இரண்டாவது ரகம்-60, சாத்துக்குடி-40, சப்போட்டா-15, கொய்யா -20, அன்னாசி-35.

**வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் நிலக்கடலை சாகுபடி பயிற்சி**

பட்டுக்கோட்டை: பட்டுக்கோட்டை வேளாண் ஆராய்ச்சி நிலையத்தின் நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் அம்புலியாறு உபவடிநில பகுதி விவசாயிகளுக்கு நிலக்கடலை சாகுபடி குறித்த ஒரு நாள் பயிற்சி மற்றும் கருத்தரங்கம் நடந்தது. வேளாண் ஆராய்ச்சி நிலைய தலைவர் நடராஜன் தலைமை வகித்தார். உதவி பேராசிரியர் கவினோ முன்னிலை வகித்தார். முதுநிலை ஆராய்ச்சியாளர் சண்முகசுந்தரம் வரவேற்றார். நிலக்கடலையில் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்கள் பற்றியும் அதிக மகசூல் பெறுவதற்கும் பூச்சி மற்றும் நோய்கள் கட்டுப்பாடு பற்றியும், புதிய ரகங்களை பற்றியும் தலைவர் நடராஜன் பயிற்சியளித்தார். "நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம், சிவப்புக்கம்பளி புழு, சுருள்பூச்சி மற்றும் புருட்டினா புழு போன்றவை நிலக்கடலையில் தாக்கும் முக்கியமான பூச்சிகளாகும். இதனை கோடை உழவு செய்தல், தட்டை பயறு ஊடுபயிராக சாகுபடி செய்தல், செடிகளில் இருக்கும் புழுக்கள் மற்றும் முட்டைகளை கைகளால் எடுத்து அழித்தல், நிலங்கள் மற்றும் வரப்புகளில் உள்ள களைகளை அகற்றி இவற்றை

கட்டுப்படுத்தலாம். ஏக்கருக்கு மூன்று அல்லது நான்கு விளக்கு பொறிவைத்து கட்டுப்படுத்துதல். என்.பி.வி., கரைசலை தெளித்தல், சுருள் பூச்சி அதிகம் தாக்கும் இடங்களில் குத்து நிலக்கடலைக்கு பதில் கொடி நிலக்கடலை ரகங்களை சாகுபடி செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகிறது," என முனைவர் அருள்பிரகாஷ் கூறினார்.

பூச்சிகள் பொருளாதார சேத நிலையை கடந்து இருந்தால் குயினால்பாஸ் 25 சதவீதம் ஈ.சி., 300 மில்லி, பாஸ்ஸிலோன் 35 சதவீதம் ஈ.சி., 300 மில்லி, எண்டோசல்பான் 35 சதவீதம் ஈ.சி., 300 மில்லி, டைக்குளோராவஸ் 76 சதவீதம் ஈ.சி., 300 மில்லி பூச்சிக்கொள்ளி மருந்துகள் ஏதாவது ஒன்றை ஒரு ஏக்கரில் தெளித்து கட்டுப்படுத்தலாம்
முனைவர் லாதா கூறுகையில், "நிலக்கடலையின் முக்கிய நோய்களான இலைப்புள்ளி நோய், துருநோய், ஹேமுகஸ் நோய் மற்றும் வளைய தேமல் நோய்கள் ஆகும். இலைகளை கட்டுப்படுத்த டிரைகோ டெர்மாவிரிடி, சுடோமோனாஸ், ப்ளோரசன்ஸ், நான்கு கிராம் ஒரு கிலோ மற்றும் காப்பர் ஆக்ஸிகளோரைடு என்ற மருந்தை தெளிப்பதன் மூலம் இந்நோய்களை கட்டுப்படுத்தலாம்," என்றார். கீழத்தூர், ஆவணத்தான்கோட்டை, மாங்காடு, கொட்டூர் விவசாயிகள் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முதுநிலை ஆராய்ச்சியாளர் சக்கரவர்த்தி நன்றி கூறினார்.

**சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர் கூட்டம்**

தஞ்சாவூர்: குருங்குளம் சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியா ளர்கள் சங்கக் கூட்டம்  தஞ்சையில் நடந்தது. பொதுச் செயலாளர் திருப்பதி தலைமை வகித்தார். தமிழக பட்ஜெட்டில் கரும்பு விவசாயிகளுக்கு அறிவித்துள்ள நடப்பு ஆண்டு கரும்பு விலையாக ரூபாய் 100 சேர்த்து வாகன வாடகையுடன் ரூபாய் ஆயிரத்து 650 என அறிவித்து கரும்பு விவசாயிகளை ஏமாற்றியதை கண்டிப்பது.  தனியார் ஆலைகள் ரூபாய் ஆயிரத்து 750ம், வாகன வாடகையாக ரூ.100, ஊக்கத்தொகை என்று ரூபாய் 2 ஆயிரம் வழங்கி வருவது போல் அரசு ஆலைகளிலும் வழங்க வேண்டும். நடப்பு பருவத்திற்கு தனியார் ஆலைகள் வழங்கும் விலைக்கு நிகராக பொதுத்துறை மற்றும் கூட்டுறவு ஆலை விவசாயிகளுக்கு ரூபாய் 2 ஆயிரம் தமிழக  அரசு அறிவிக்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சங்க அமைப்பாளர் புண்ணியமூர்த்தி, பொருளாளர் ண்ணாதுரை, செயலாளர் ஆரோக்கியசாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**இறவையில் எள் விளைச்சல் அமோகம் : தியாகதுருகம் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி**

தியாகதுருகம்: இறவையில் எள் விளைச்சல் அமோகமாக உள்ளதால் தியாகதுருகம் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியுடன் உள்ளனர்.கோடைக்கால சாகுபடியாக கிணற்றுப்பாசன வசதி கொண்ட பெரும்பாலான விவசாயிகள் இறைவையில் எள் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். தியாகதுருகம், ரிஷிவந்தியம், விருகாவூர், அசகளத்தூர், நாகலூர், கூத்தக்குடி, சூளாங்குறிச்சி பகுதிகளில் 1,000 ஏக்கர் பரப்பளவில் எள் சாகுபடி செய்துள்ளனர்.மூன்று மாதத்தில் விளைந்து மகசூலைத்தரும் குறுகிய கால எளிய சாகுபடி பயிரான எள் செடிகள், தற்போது நன்கு செழித்து வளர்ந்து பூக்கும் பருவத்தில் உள்ளது. மருத்துவ குணம் கொண்ட நல்லெண் ணெய் பயன்படுத்துவது மக்களிடையே அதிகரித்து வருவதால் எள்ளுக்கு அதிக வரவேற்பு ஏற்பட் டுள்ளது.கள்ளக்குறிச்சி மார்க் கெட் கமிட்டியில் கடந்த ஆண்டு ஏப்., மாதம் துவங்கி கடந்த பிப்., மாதம் வரை 3330 டன் எள் 13.38 கோடி ரூபாய்க்கு விற்பனை நடந்துள்ளது.

நேற்று முன்தினம் விற்பனைக்கு வந்த 80 கிலோ எடையுள்ள எள் மூட்டை அதிகபட்சமாக 3,729 ரூபாய்க்கும் குறைந்த பட்சம் 2,966 ரூபாய்க்கும் விற்பனையானது.இன்னும் எள் அறுவடை சீசன் துவங்காததால் வரும் நாட்களில் இன்னும் கூடுதல் விலை கிடைக்க வாய்ப்புள்ளது. கடந்த ஆண்டு நல்ல சீசன் தருணத்தில் ஒரு மூட்டை அதிகபட்சமாக 4,279 ரூபாய்க்கு விற்பனையானது. இவ்வாண்டும் பரவலாக விவசாயிகள் எள் பயிரிட்டுள்ளதால் கடந் தாண்டை போலவே எள் வரத்து அதிகமிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.கோடை காலத்தில் நம்பகமான பயிராக எள் சாகுபடி

உள்ளதாலும், தற்போது எவ்வித பாதிப் புமின்றி செழித்து செடிகள் வளர்ந்துள்ளதாலும் நல்ல மகசூல் கிடைக்கும் என்ற நம்பிக்கையால் தியாகதுருகம் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**விவசாய தொழிலாளர்சங்க ஒன்றிய கூட்டம்**

உளுந்தூர்பேட்டை: உளுந்தூர்பேட்டையில் அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்க திருநாவலூர் ஒன்றிய கூட்டம் நடந்தது.ஒன்றிய தலைவர் ஏழுமலை தலைமை தாங்கினார். நேரு, ஆறுமுகம், சிவகாமி முன் னிலை வகித்தனர். மாவட்ட தலைவர் கலியன், செயலாளர் சுப்ரமணியன் சிறப்புரை ஆற்றினர். ஒன்றிய செயலாளர் மன்மதன் வேலை அறிக்கை வாசித்தார். மா.கம்யூ., ஒன்றிய செயலாளர் ஜெய்சங்கர், நிர்வாகிகள் ஜெயக்குமார், அலமேலு உட்பட பலர் கலந்து கொண்டனர். ஒன்றிய பொருளாளர் குமார் நன்றி கூறினார்.

**விதைமஞ்சள் சேகரிக்கும் வழிமுறைகள் தோட்டக்கலை உதவி இயக்குனர் தகவல்**

உளுந்தூர்பேட்டை: விதைமஞ்சள் சேகரிக்கும் வழிமுறைகள் குறித்து தோட்டக்கலை உதவி இயக்குனர் விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.உளுந்தூர்பேட்டை தோட்டக்கலை உதவி இயக்குனர் நிர்மலா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: உளுந்தூர்பேட்டை வட்டாரம் எறையூர், எலவனாசூர்கோட்டை பகுதிகளில் மஞ்சள் அறுவடை நடந்து வருகிறது.

அறுவடை செய்தபின் விவசாயிகள் அடுத் தாண்டு பயிர் செய்ய விதை மஞ்சள் சேமிப்பது வழக்கம். விதை மஞ்சளை சேமிப்பது மிக முக்கியமான தொழில் நுட்பமாகும்.கிழங்கு அழுகல் நோய் தாக்காத வயல்களிலிருந்து விதை மஞ்சளை தேர்வு செய்ய வேண்டும். பின்னர் கார்பன்டாசிம் மருப்து கரைசலில் (ஒரு கிராம் மருந்தை ஒரு லிட் டர் தண்ணீரில் கலந்து) விதை மஞ்சளை 15 முதல் 20 நிமிடம் வரை நனைத்து சேமிக்க வேண் டும். பின் நிழற்பாங்கான இடத்தில் மணல் பரப் பின்மீது மஞ்சளை பரப்பி சிறிது தண்ணீர் தெளித்து மணலைக் கொண்டு மூடவேண்டும்.இவ்வாறு இரண்டு மாதம் சேமிக்கும்போது மஞ்சளின் உறக்கநிலை நிறைவுற்று மீண்டும் விதைப்புக்கு தயாராகும்.

**மண் புழு உரம் தயாரிக்க மானியம்**

திருப்பூர்: மண் புழு உரம் தயாரிப்ப தற்கான மானியம், திருப்பூர் வட்டாரத்தில் ஆறு விவ சாயிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது.மண் வளத்தை மேம் படுத்தி, அதிக மகசூல் எடுக்க உதவும் மண் புழு உரம் தயாரிப்பதற்கான மானி யம், திருப்பூர் வட்டாரத் தில் ஆறு பேருக்கு வழங்கப் பட்டுள்ளது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் மற்றும் நீர்வள நிலவள திட்டத்தில் மண் புழு உரம் தயாரிப்பதற்கான வழி முறைகளும், மானியமும் அளிக்கப்பட்டு வருகிறது.திருப்பூர் வேளாண் உதவி இயக்குனர் செரீப் கூறியதாவது:விவசாயிகள் அதிக மக சூல் எடுக்கவும், மண்ணின் தன்மை மாறாமல் பாதுகாக்க வும் மண்புழு உரம் உதவி செய்கிறது.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் மற்றும் நீர் வள நிலவள திட்டம் மூலம் மண்புழு உரம் தயாரிக்க உதவி செய்யப்படுகிறது.மண் வளத்தை பாதுகாத் தல் என்ற திட்டத்தின் அடிப் படையில், மண்புழு உரம் தயாரிப்பு திடல் அமைக்கப் படுகிறது. இதன் மதிப்பீடு 90 ஆயிரம் ரூபாய்; 50 சத வீதம் மானியம் வழங்கப் படுகிறது. தேர்ந்தெடுக்கப் பட்ட விவசாயிகள், வேளாண் பல்கலை மூலம் பயிற்சி பெறுகின்றனர்; பின், வேளாண் கள பணி யாளர்கள் அறிவுரையுடன், விவசாயிகள் தங்களது நிலத் தில் திடல் அமைக்கின்றனர்.இத்திட்டத்தின் கீழ் திருப்பூர் வட்டாரத்தில் ஆறு பேர் திடல் அமைத் துள்ளனர். இவர்களுக்கு இரண்டு லட்சத்து 5,000 ரூபாய் மானியம் வழங்கப் பட்டுள்ளது.

இவர்கள் அமைத்துள்ள திடலை மற்ற விவசாயிகள் பார்வை யிட்டு, அவர்களது நிலங் களிலும் மண்புழு உரம் தயாரிக்க முன்வர வேண்டும், என்றார்.

**பட்டுக்கூடு உற்பத்தி குறைந்ததால் விலை உயர்ந்தது : உள்ளூர் சந்தையில் விற்க அழைப்பு**

உடுமலை: 'உற்பத்தி குறைவால், சில வாரங்களாக விலை குறைந்திருந்த பட்டுக்கூடுகளின் விலை மீண்டும் உயர்ந்து வருகிறது. இதனால், உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். எனவே, உள்ளூர் கொள்முதல் மையங்களிலேயே விற்பனை செய்ய, ஆணையர் அழைப்பு விடுத்துள்ளார்.

உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் பல ஆயிரம் ஏக்கரில் மல்பெரி பயிரிடப்பட்டு, பட்டுக்கூடு உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகள், கர்நாடகா மற்றும் உள்ளூர் சந்தைகளில் விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. சீனா இறக்குமதி பாதிப்பு உள்ளிட்ட காரணங்களால், பட்டுக்கூடுகள் விலை 260 ரூபாய் வரை பல மாதங்கள் நீடித்தது. இம்மாத துவக்கத்தில் கர்நாடகா ரீலர்கள் கொள்முதலை குறைத்தனர். தமிழகத்தில் இருந்து பட்டுக்கூடுகளை எடுத்துச் சென்ற உற்பத்தியாளர்கள், பல நாட்கள் காத்திருந்து விற்பனை செய்ய வேண்டிய அவல நிலை ஏற்பட்டது.

இதனால், கூடுகளின் விலை சரிந்து கிலோ 190 ரூபாயில் இருந்து அதிகபட்சமாக 210 ரூபாய் வரை மட்டுமே விற்றது. கச்சாப்பட்டு இறக்குமதி அதிகரிக்கப்படும் என்ற மத்திய அரசு அறிவிப்பால், உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் நூலிழைக்கு விலை கிடைக்காது என்பதால், 'ரீலர்'கள் கொள்முதலை குறைத்ததாக உற்பத்தியாளர்கள் தெரிவித்து வந்தனர்.

தொழிலாளர் பற்றாக்குறை போன்ற பிரச்னைகளால் பாதிக்கப்பட்டிருந்த உற்பத்தியாளர்கள் விலை சரிவால் வேதனை அடைந்தனர். இந்நிலையில், முன்னதாகவே துவங்கிய கோடை காலத்தால் தமிழகத்தின் பிற பகுதிகளில் பட்டுக்கூடு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. மாத துவக்கத்தில் கொள்முதலை குறைத்த 'ரீலர்' களுக்கு பட்டுக்கூடு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், உள்ளூர் மற்றும் கர்நாடகா மையத்தில் பட்டுக்கூடுகளுக்கு விலை மீண்டும் உயரத்துவங்கியுள்ளது.தர்மபுரி, கோவை போன்ற கொள்முதல் மையங்களில் கடந்த இரண்டு நாட்களாக வெண்பட்டுக்கூடுகள் கிலோ 240 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகிறது. கர்நாடகாவில் தரமான கூடுகளுக்கு 260 ரூபாய் வரை விலை கிடைக்கிறது.பட்டுக்கூடு உற்பத்தியாளர்கள் கூறுகையில், 'கோடையில் புழு வளர்க்க தகுந்த தட்பவெப்பம் கிடைக்காது. தண்ணீர் பற்றாக்குறையால் மல்பெரி சாகுபடியும் பாதிப்புக்கு உள்ளாகும். உற்பத்தியை குறைக்க வேண்டிய நிலை ஏற்படும். உடுமலை பகுதியில் கோடையிலும் காற்றோட்டம் இருப்பதால் வெண்பட்டு கூடுகளை உற்பத்தி செய்ய முடிகிறது,' என்றார்.பட்டுத்துறை ஆணையர் கோரிக்கை: 'தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகளை மாநில அரசின் கொள்முதல் மையங்களிலேயே உற்பத்தியாளர்கள் விற்பனை செய்ய வேண்டும்' என, பட்டு வளர்ச்சி துறை ஆணையர் ஹர்மந்தர்சிங் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த உதவி இயக்குனர் அலுவலகங்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், 'பட்டுக்கூடுகளை அருகிலுள்ள மாநிலங்களுக்கு விற்பனைக்கு எடுத்துச் செல்வதால் கூடுகள் சேதமடைதல், போக்குவரத்து செலவு, எடை இழப்பு, மொழி பிரச்னையால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். மாநில அரசின் கொள்முதல் மையங்களில் அன்றாட சந்தை நிலவரங்களை, நாட்டின் அனைத்து முன்னோடி மையங்களில் இருந்தும் பெறப்பட்டு, அதே விலை உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே,

உற்பத்தியாளர்கள் உள்ளூர் கொள்முதல் மையங்களிலேயே கூடுகளை விற்க வேண்டும்,' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த சர்வே**

திருப்பூர்: செடிகளை முற்றிலும் அழித்துவிடும் மாவுப் பூச்சியை கட்டுப்படுத்த, திருப்பூர் வேளாண் வட் டாரத்தில் சர்வே எடுக்கும் பணி துவங்கியுள்ளது.திருப்பூர் வட்டாரத் திலும் மாவுப்பூச்சி வேக மாக பரவி வருகிறது. வெயில் காலம் அதிகமாக இருப்பதால், மாவுப்பூச்சி பரவுதலும் அதிகரித்துள் ளது. அனைத்து பயிர் களிலும் படர்ந்து விளைச் சலை பாதிக்கும் சூழ்நிலை உருவாகி உள்ளது.விவசாயிகள் கூறிய தாவது:மாவுப்பூச்சியால் செம் பருத்தி, துளுக்கமல்லி உள் ளிட்ட பூச்செடிகள் அதிகள வில் பாதிக்கப்பட்டுள்ளன. பப்பாளி, கொய்யா, குச்சிக் கிழங்கு உள்ளிட்ட பயிர் களும் பாதிக்கும் நிலையில் உள்ளன.

மாவுப்பூச்சி தாக்கப் பட்டுள்ள செடிகள் முற்றி லும் மொட்டை அடிக்கப் பட்டு, எறும்புகள் ஊறுகின் றன; சாதாரண மருந்து களுக்கு கட்டுப்படுவ தில்லை.மாவுப்பூச்சி தாக்கப்பட் டால், பயிர்களின் விளைச் சல் முற்றிலும் பாதிக்கப் படும். கோடையில் விளைச்சல் எடுப்பதே கடினமானது; மாவுப் பூச்சியின் தாக்கத்தால் விவசாயிகள் அதிகளவில் பாதிப்படையும் வாய்ப் புள்ளது. வேகமாக பரவி வரும் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த, உரிய நடவடிக்கை தேவை, என்றனர்.உதவி வேளாண் இயக்குனர் செரீப் கூறுகை யில், "திருப்பூர் வட்டாரத் தில் பரவி வரும் மாவுப் பூச்சி பற்றிய சர்வே எடுக் கும் பணி துவங்கியுள்ளது. வேளாண் துறை, தோட்டக் கலைத் துறை, பட்டு வளர்ப்பு துறை மூலம் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மாவுப்பூச்சி தாக்கப்பட்ட இடங்களுக்கு பணியாளர்கள் நேரடியாக சென்று ஆய்வு செய் கின்றனர். மாவுப்பூச்சி பரவும் தன்மை அறிந்து, உடனடியாக மருந்து வழங்கப்படும்," என்றார்.

**வளைகுடா நாடுகளில் இருந்து எண்ணை இறக்குமதி செய்வதில் 2050–ம் ஆண்டு இந்தியா முதல் இடம் பெறும் மத்திய வெளியுறவுத்துறை மந்திரி பேச்சு**

*பெரும்பாவூர், மார்ச்.25–*

*வளைகுடா நாடுகளில் இருந்து எண்ணை இறக்குமதி செய்வதில் 2050–ம் ஆண்டில் இந்தியா முதல் இடம் பெறும் என்று மத்திய வெளியுறவுத்துறை மந்திரி சசிதரூர் கூறினார்.*

*கருத்தரங்கம்*

*இந்திய வளைகுடா நாடுகளின் கடல் வழி வாணிப வர்த்தக உறவு குறித்த கருத்தரங்கம் கேரள மாநிலம் கொச்சியில்*

நடைபெற்றது. தென்பிராந்திய கமாண்டர் வைஸ் அட்மிரல் கே.என்.சுசீல் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் மத்திய வெளியுறவுத்துறை மந்திரி சசிதரூர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கருத்தரங்கை தொடங்கிவைத்து பேசினார்.
அப்போது அவர் கூறியதாவது:–


நல்லுறவு பாதிப்பு
கடல் வழியாக தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் நுழைந்து உள்நாட்டு குழப்பத்தை விளைவிப்பது மிகவும் அச்சுறுத்தலாக உள்ளது. இதில் தீவிரவாதிகள், கடல் கொள்ளைக்காரர்கள், ஒற்றர்கள் அதிகம் ஈடுபடுகிறார்கள். இது பற்றி இந்திய கடற்படை 2004–ம் ஆண்டு முதல் இந்திய உள்துறைக்கு எச்சரிக்கை விடுத்து உள்ளதாகவும் தெரிகிறது. இந்த தீவிரவாதிகளின் செயல்பாடுகள் அதிகரிப்பால் இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவு பாதிக்கப்படுகிறது. பொது மக்களின் உயிர், மற்றும் உடைமைகளுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. எனவே உள்நாட்டில் அமைதியை நிலை நிறுத்த இரு நாட்டு உறவையும் வலுப்படுத்த இருநாடுகளும் சேர்ந்து இந்த செயலில் முக்கியமான முடிவு எடுத்து செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

இந்தியா முதல் இடம்
மொகஞ்சதரோ–ஹரப்பா நாகரீகம் முதல் இந்தியா வளைகுடா நாடுகளின் வர்த்தக வாணிப உறவு பரந்து விரிந்து பெருகி உள்ளது. இந்தியாவுக்கு தேவையான எரிபொருள் 75 சதவீதம் வளைகுடா நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தியா எரிசக்தி கழக கணக்குப்படி 2050–ம் ஆண்டு எண்ணை இறக்குமதியில் இந்தியா முதல் இடம் பெறும்.

வெளியுறவு கொள்கைகளை வகுப்பதில் இந்தியா கடல் மூலமான வர்த்தக உறவுகளுக்கு முக்கியத்துவம் அளித்து செயல்பட்டு வருகிறது. இந்தியாவின் வெளியுறவு கொள்கையில் வளைகுடா நாடுகளுக்கான வர்த்தக உறவுகளுக்கு தனி இடம் தரப்பட்டு வருகிறது. இந்த உறவு வலுப்பெற பிரதமர் மன்மோகன் சிங் நடத்திய சவுதி அரேபிய சுற்றுப்பயணமும், துபாய் அரசு நடத்திய இந்திய சுற்றுப்பயணமும் மேலும் பல வழிகளை திறந்துவிட்டுள்ளது. இவ்வாறு வெளியுறவு மந்திரி சசிதரூர் கூறினார்.

நிகழ்ச்சியில் இந்தியாவின் ஓமன் நாட்டு அம்பாசிடர் ஷேக் ஹூமைதுசுல்தான் அல்மேனி, கேரள சர்வதேச மைய இயக்குனர் ஜெனரல் டி.பி.சீனிவாசன், நவ்தீப் சூரி ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக ஓமன் நாட்டில் இருந்து கொச்சி வந்த ஜூவல் ஆப் மஸ்கட் என்ற பாய்மரக்கப்பலுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

### ஏப்ரல்–ஜனவரி மாத காலத்தில் ஏலக்காய் ஏற்றுமதி அதிகரிப்பு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

கொச்சி

நடப்பு நிதி ஆண்டில், ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான 11 மாதங்களில் நாட்டின் 1,500 டன் ஏலக்காய் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. சென்ற 2008–09–ஆம் முழு நிதி ஆண்டில் ஏலக்காய் ஏற்றுமதி 750 டன் அளவிற்கே இருந்தது. உள்நாட்டில் ஏலக்காய்க்கான தேவைப்பாடு அதிகரித்து வரும் நிலையிலும் ஏற்றுமதி இதுவரை 100 சதவீதம் அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

உற்பத்தி

அதே சமயம் உள்நாட்டில், நடப்பு ஆண்டில், ஏலக்காய் உற்பத்தி சரிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ஏலக்காய் உற்பத்தி சுமார் 12,000 டன் என்ற அளவில் குறைவாக இருந்தது. நடப்பு ஆண்டில் உற்பத்தி இதை விட குறைந்தாலும் ஆச்சரியம் கொள்வதற்கில்லை. ஏலக்காய் அதிக அளவில் விளையும் இடுக்கி மாவட்டத்தில் சென்ற மூன்று மாதங்களாக அநேகமாக மழை இல்லாததே இதற்கு காரணமாகும். இதனால் புதிய பருவம் தொடங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து ஏலக்காய் விவசாயிகள் சங்கத்தின் செயலாளர் கே.கே. தேவாசியா கூறும்போது, “மழை இல்லாததாலும், அதிகரித்து வரும் வெப்பத்தாலும் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இம்மாதத்திலும் மழை பெய்யவில்லை என்றால், சென்ற ஆண்டு அளவைக் காட்டிலும் ஏலக்காய் உற்பத்தி குறையும்” என்று தெரிவித்தார்.

மார்ச் மாதத்தில் மழை பெய்தால், புதிய ஏலக்காய் பருவம் ஜூன் மாதத்திற்குள் தொடங்கும் என கேரள மாநில ஏலக்காய் பதப்படுத்துவோர் மற்றும் சந்தைப்படுத்துதல் கூட்டுறவு சங்கத்தின் பொது மேலாளர் பி.சி.புன்னூஸ் கூறினார்.

விலை உயர்வு

உற்பத்தி குறைந்துள்ள நிலையில், ஏற்றுமதி அதிகரித்து வருவதால் ஏலக்காய் விலை உயர்ந்து வருகிறது. குறிப்பாக வட மாநிலங்களில் தேவைப்பாடு அதிகரித்துள்ளதால் இன்னும் சிறிது காலத்திற்கு ஏலக்காய் விலை உயர்ந்து செல்வதை தடுக்க இயலாது என்று கூறப்படுகிறது. ஒரு மாதத்திற்கு முன்னால் ஒரு கிலோ ஏலக்காய் விலை ரூ.1,000 என்ற அளவில் இருந்தது. இப்போது ரூ.1,070–ஆக உயர்ந்துள்ளது. சந்தைகளுக்கு வரத்து குறைவாக இருப்பதால் ஏலக்காய் விலை அதிகரித்த நிலையில் உள்ளது.



மாமரம் ஒன்றில் குறைவான அளவே மாங்காய்கள் காய்த்து இருப்பதை படத்தில் காணலாம்.

**பாலக்காடு மாவட்டத்தில்**

# மாங்காய் விளைச்சல் குறைந்தது; விவசாயிகள் - வியாபாரிகள் கவலை

கொழிஞ்சாம்பாறை, மார்ச்.25-

பாலக்காடு மாவட்டத்தில் மாங்காய் விளைச்சல் பாதியாக குறைந்து உள்ளதால் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர்.

**மாங்காய் விளைச்சல் அதிகம்**

கேரள மாநிலத்தில் குறிப்பாக பாலக்காடு மாவட்டத்தில் மாங்காய் விளைச்சல் அதிகமாக உள்ளது. பாலக்காடு மாவட்டத்தில் கொல்லங்கோடு, முதலமடை, கொழிஞ்சாம்பாறை உள்ளிட்ட சித்தூர் தாலுகாவில் மாங்காய் அதிகம் விளைகிறது. அதிலும் முதலமடை பஞ்சாயத்தில் சுமார் 3 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் மாங்காய் விளைகிறது.

மற்ற பகுதிகளில் 2 ஆயிரம் ஹெக்டேரில் மாங்காய் விளைகிறது. இந்தியாவிலேயே அதிகம் மாங்காய் விளைவதும் இந்த சித்தூர் பகுதியில்தான். ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் கடைசி வரை இங்கு மாங்காய் பறிக்கப்படுகிறது. இந்த சீசனில் தினசரி 75 லாரிகளில் வட இந்தியாவுக்கு மாங்காய் கொண்டு செல்லப்படுகிறது.

**விவசாயிகள் கவலை**

இந்த வருடம் கடுமையான சூடும், கால நிலை பாதிப்பாக உள்ளதால் கடந்த ஆண்டை விட மாங்காய் விளைச்சல் பாதியாக குறைந்து விட்டது. அதனால் மாங்காய் விலையும் ஒரு கிலோ 40 ரூபாய் வரை உயர்ந்து விட்டது. கிளி சுண்டன், அல்போன்சா, ஹிமபசத், தோட்டபுரி, சிந்தூரம், நடுச்சாலை வகை மாங்காய்கள் இங்கு அதிகளவு விளைகிறது. இங்கிருந்து பெங்களூர், சென்னை, மும்பை, கொல்கத்தா, ஐதராபாத் நகரங்களுக்கு ரெயில் மூலமும், துபாய், பக்ரைன், மலேசியா ஆகிய நாடுகளுக்கு விமானம் மூலமும் மாங்காய் அனுப்பப்படுகிறது.

கால நிலை மாற்றத்தால் மாங்காய் உற்பத்தி குறைந்து, வருவாய் இன்றி கூலித்தொழிலாளர்கள் தொழில் இழந்து உள்ளனர். மாங்காய் உற்பத்தி செலவு கூடியதாலும், சரியான மாங்காய் உற்பத்தி இல்லாததாலும் விவசாயிகளுக்கு போதிய வருமானம் இந்த வருடம் கிடைக்கவில்லை. மாங்காய் விளைச்சல் குறைந்ததால் பிப்ரவரி மாதம் முதல் வாரம் செய்ய வேண்டிய ஏற்றுமதி மார்ச் 15-ந் தேதிதான் தொடங்கப்பட்டது என்று விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு மாங்காய் உற்பத்தியை விட 60 சதவீதம் குறைவாக கிடைத்ததாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் வரும் மாதங்களில் மாங்காய் விலை கிடு கிடு என்று உயரும் வாய்ப்பு உள்ளது.